திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : திரு.பவன்குமார் ஜி கிரியப்பனவர், இ.ஆ.ப.

ந.க.எண்:இ1/1575/2022/ம4 நாள்: 16.08.2024

பொருள்: மனைப்பிரிவு – திருப்பூர் மாநகராட்சி – மண்டலம் 4 – ஆண்டிபாளையம் கிராமம் – க.ச.எண் 27/3B2, 27/4 மற்றும் 36/1–ல் 4.32ஏக்கர் (அல்லது) 17500.00ச.மீ பரப்பளவு இடத்தினை நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் / உறுப்பினர் செயலர் (பொ), திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம், அவர்களால் மனைகளாக மாற்ற முன் அனுமதி வழங்கப்பட்டுள்ள இடத்தில் உத்தேச குடியிருப்பு மனையிட ஒப்புதலுக்கான தொழில்நுட்ப அனுமதி வரைபடம் – ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. திரு.A.சிவபாலன் மற்றும் திரு.A.குமாரவடிவேல், 15, கே.வி.ஆர் நகர், கருவம்பாளையம், திருப்பூர் அவர்களின் 14.07.2022 நாளிட்ட மனு.
2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் /உறுப்பினர் செயலர் (பொ), திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம், அவர்களின் ந.க.எண்.1589/2022/திமா, நாள்:05.07.2024.
3. தான சாசனப் பத்திர எண்: 5923/2022 நாள்: 02.06.2022.
4. மாமன்ற தீர்மான எண்: 167, நாள்:31.07.2024.

உத்தரவு :

திருப்பூர் மாநகராட்சி – மண்டலம் 4 – ஆண்டிபாளையம் கிராமம் க.ச.எண் 27/3B2, 27/4 மற்றும் 36/1–ல் 4.32 ஏக்கர் (அல்லது) 17500.00ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை 2ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் /உறுப்பினர் செயலர் (பொ), திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களது செயல்முறை ஆணை கடிதத்தின், திட்ட அனுமதி உத்தரவில் ம.வ/ந.ஊ.(திமா)/தி.உ.தி.கு.எண்.41/2022 என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதியும், மனைப்பிரிவு வரைபடத்திற்கு திட்ட அனுமதி எண்.45/2022 என எண்ணிட்டு சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளுடன் மனைப்பிரிவு அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

எனவே பார்வை 2 ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்/ உறுப்பினர் செயலர் (பொ), திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமத்தின் செயல்முறை ஆணை உத்தரவிற்கிணங்க ஆண்டிபாளையம் கிராமம் க.ச.எண்.27/3B2, 27/4 மற்றும் 36/1–ல் 4.32 ஏக்கர் (அல்லது) 17500.00ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு திருப்பூர் நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி.

இணைப்பு:
1. மனைப்பிரிவு வரைபடம் – 1.
2. திட்ட அனுமதி உத்திரவு மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்.

பெறுநர்,

திரு.A.சிவபாலன் மற்றும் திரு.A.குமாரவடிவேல்,
15, கே.வி.ஆர் நகர்,
கருவம்பாளையம்,
திருப்பூர்–641604